# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩක්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

**No:** 24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** +94 11 2565304 – 6, 5552746, 5552749, **Fax:** +94 114714460
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org

**வடமாகாணசபைத் தேர்தல் 2013**

**ஊடக அறிவித்தல் இல 05**

**செப்டெம்பர் 19, 2013, கொல்லன்கலட்டி, காங்கேசன்துறை தேர்தல் தொகுதி, வட மாகாணம்.**

கொல்லன்கலட்டிக் கிராமத்திலுள்ள அநேகமான கிராமவாசிகள், கிராமத்தில் இனந் தெரியாத குழுக்கள் திடீரென நடமாடித் திரிவதன் காரணமாக அச்சமடைந்திருப்பதாக தே.வ.க.நி களக் கண்காணிப்பாளர் அறிவித்துள்ளார். வாக்களிக்காதிருப்பதற்கு சமூகத்தில் ஒரு பகுதியினர் கருதுவதாக அவர் அறிவிக்கிறார். அவர்களில் சிலர் இரண்டு நாட்களுக்கு முன்னர் த.தே.கூ இன் பருத்தித்துறை கூட்டத்தில் கலந்து கொண்டதுடன் அத்தகையதொரு எதிர்விளைவைத் தாங்களும் எதிர்கொள்ளலாமென அவர்கள் கவலை கொண்டுள்ளனர். பருத்தித்துறையில் த.தே.கூ இன் கூட்டத்தின் பின் த.தே.கூ ஆதரவாளர்களின் உடமைகள் சேதமாக்கப்பட்டன.

**செப்டெம்பர் 19, 2013, ஆவரங்கால், கோப்பாய் தேர்தல் தொகுதி, யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம், வட மாகாணம்.**

நடு இரவு வேளைகளில் சிங்களம் பேசும் ஒரு குழு கிராமத்தில் சுற்றித்திரிவதாக ஆவரங்கால் கிராமத்தவர்கள் தே.வ.க.நி இற்கு அறிவித்துள்ளனர். அவர்கள் யாழ் மாவட்ட த.தே.கூ வேட்பாளர், அரியக்குட்டி பரஞ்சோதி அவர்களின் சகோதரி வீட்டு வெளி மதில் சுவர்களில் ஒட்டியிருந்த த.தே.கூ சுவரொட்டிகளை சிதைத்துள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர், இவ்வீடு வேட்பாளரின் கட்சி அலுவலகமாகவும் செயற்படுகின்றது. அத்தோடு அவர்கள் அவ்வீட்டு விறாந்தையில் வெற்றிலையின் உருவச் சின்னத்தை வரைந்ததோடு அப்துல் ஹமீட் நௌமான் சிராஸ் மொகமெட் ( ஐ.ம.சு.கூ வேட்பாளர் இல.04), மற்றும் முடியப்பு றெமிடியஸ் (ஐ.ம.சு.கூ வேட்பாளர் இல.18) ஆகியோர்களது சுவரொட்டிகளை ஒட்டியதாகவும் குற்றஞ் சாட்டப்படுகிறது. அச்சுவேலி பொலிஸ் ஸ்தலுத்துக்கு விஜயம் செய்து அனைத்து சுவரொட்டிகளையும் அகற்றியது. இச்சம்பவம் தொடர்பாக ஒரு உத்தியோகபூர்வமான முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. பொலிசார் இச்சம்பவம் குறித்து EIB புத்தகத்தில் பதிவு செய்து கொள்வதற்குப் பதிலாக நடமாடும் தகவல் புத்தகத்தில் (MOIB. 249/47) பதிவு செய்துள்ளனர். அச்சுவேலிப் பொலிஸ் சார்ஜன்ட் துசித்த அவர்கள் தெரிவித்ததின்படி, புலன்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது ஒரு விஷமத்தனமான சம்பவமாக இனங்காணப்பட்டுள்ளதேயன்றி தேர்தல் தொடர்பானதாக அல்ல எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

**செப்டெம்பர் 19, 2013, வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி, யாழ்ப்பாண மாவட்டம், வட மாகாணம்.**

கடந்த இரவு ஐ.ம.சு.கூ வேட்பாளர்கள் நௌமான் சிராஸ் மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் ஆதரவாளர்கள் மற்றும் அதே போன்று ஈ.பி.டி.பி கட்சி ஆதரவாளர்கள் ஆகியோர்கள் சாந்தை, தில்லாலை, பொன்னாலை ஆகிய கிராமங்களின் வீதிகளில் சுற்றித் திரிந்ததாக தே.வ.க.நி இன் கண்காணிப்பாளர்கள் அறிவிக்கின்றனர். இதன் காரணமாக எழுந்துள்ள பதட்டத்தினால், தாங்கள் வாக்களிப்பதற்கு செல்வதில்லை என கிராமத்திலுள்ள சிலர் சுட்டிக் காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

**வட மாகாணத்தின் மன்னார் மாவட்டத்திலுள்ள மன்னார் தேர்தல் தொகுதி**

தே.வ.க.நி களக் கண்காணிப்பாளர்களால் அறிவிக்கப்பட்டபடி உதயபுரம், வங்காலைப்பாடு மற்றும் பேசாலை ஆகிய கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாக்காளர் அட்டைகளை இன்னமும் கிடைக்கப் பெறவில்லை என அறிவிக்கப்படுகிறது.

கலாநிதி பா.சரவணமுத்து
இணை-அழைப்பாளர்

சுனில் ஜயசேகர
இணை-அழைப்பாளர்

உதய கலுபதிரண
இணை-அழைப்பாளர்